முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம்- வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II **Communication and MediaStudies I,II**	**87** | **T** | **I,II**	**மூன்று மணித்தியாலம்** **Three Hours**

தரம் 10

அறிவுறுத்தல்:

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.
3. பின்வரும் வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக
4. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி I

1. தொடர்பாடல் பற்றிய கூற்றுக்களில் சரியானது?
   1. முக பாவத்தினால் மட்டுமே வெளிப்படுத்தமுடியும்.
   2. இருவருடன் மட்டுமே தொடர்பாடலில் ஈடுபடமுடியும்.
   3. உணர்வுகளை , எண்ணங்களை , கருத்துக்களை பரிவர்த்தனை செய்வதனைக் குறிக்கும்.
   4. மொழிமூலம் மட்டும் உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்.

2 லெஸ்கோ , அல்மிரா குகை ஓவியங்கள் காணப்படும் நாடுகள் முறையே
   1. பிரித்தானியா , ஜேர்மனி
   2. ஸ்பெயின் , ஜேர்மனி
   3. பிரான்ஸ் , ஸ்பெயின்
   4. ஸ்பெயின் , பிரான்ஸ்

3. துடுப்பாட்ட வீரன் ஒருவன் எதிரணியின் பந்து வீச்சை எவ்வாறு எதிர்கொள்வது என சிந்தித்துக் கொண்டிருந்தான். அத்தகைய சந்தர்ப்பத்தில் அவதானிக்கக்கூடியது.
   1. ஆளுள் தொடர்பாடல்
   2. நபரிடைத்தொடர்பாடல்
   3. குழுத்தொடர்பாடல்
   4. வெகுஜனத் தொடர்பாடல்

4. எறிவையற்ற ஊடக உபகரணங்களில் **உள்ளடங்காதது**
   1. காந்தப்பலகை
   2. பக்கப்புரட்டி
   3. செய்திப்பலகை
   4. ஊடாடுகைப்பலகை

5. கலங்கரை விளக்க உபாயமுறையை பயன்படுத்தி நடைபெற வேண்டிய தொடர்பாடல் வகை
   1. குழுத்தொடர்பாடல்
   2. அகத் தொடர்பாடல்
   3. ஆளிடைத்தொடர்பாடல்
   4. வெகுசனத்தொடர்பாடல்

www.lkedu.lk

6. பின்வருவனவற்றில் மரபு ரீதியான தொடர்பு முறை அல்லாதது

1. பறைமுழக்கம்
2. தொலைபேசி மூலமான உரையாடல்
3. சமிக்ஞை குறியீட்டை பயன்படுத்தல்
4. புகைவழியாக செய்தி அனுப்புதல்.

7. இலங்கையின் வெளியிடப்பட்ட முதலாவது செய்திப்பத்திரிகை

1. உதயதாரகை
2. லங்காலோகய
3. தினமின
4. கொழும்பு ஜேர்னல்

8. அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து கண்காணிக்கப்படுவது

1. செய்தி தொழில்நுட்பத்தினால்
2. குறுந்தூர தொலைக்காட்சி கமராக்களினால்
3. செல்லிடத்தொலைபேசியினால்
4. பொலிசாரின் நடமாடும் சேவையினால்

9. பின்வருவனவற்றில் கட்புல மொழிக்கு மட்டும் எடுத்துக் காட்டாக அமையக்கூடியது.

1. வானொலி உரையாடல்
2. ஸ்பரிசம்
3. வீதியில் காணப்படும் போக்குவரத்து சமிச்சைகள்
4. தொலைக்காட்சி நேர்காணல்.

10.தொலைக்காட்சியில் ஆடைக்கான விளம்பரத்தினை பார்த்த அக்சரன் அதனை வாங்க வேண்டும் என ஆவலுற்றாள்.இது பின்வருவனவற்றில் எத் தொடர்பாடல் நோக்கங்களுடன் தொடர்புடையது?

1. மகிழ்வூட்டல்
2. கல்வியூட்டல்
3. தகவல் வழங்கல்
4. தூண்டலை ஏற்படுத்தல்.

11.பின்வருவனவற்றில் எது ஆவணமாக்கும் இறுதி நடவடிக்கைக்கு **பொருத்தப்பாடற்ற** சாதனம்?

1. கணனி
2. லமினேட்டிங் இயந்திரம்
3. கட்டும் சாதனம்
4. ஸ்ரெப்ளர்

12.பின்வருவனவற்றுள் மொழியின் அடிப்படைப் பணிகளுள் ஒன்று அல்லாதது

1. நேரமுகாமைத்துவம்
2. குறுகிய சிந்தனை
3. எண்ணங்களை பல்வகைப்படுத்துதல்
4. அறிவைப் பாதுகாத்தல்

13.பக்க வடிவமைப்பிற்கு பயன்படுத்தக்கூடிய மென்பொருள் வகை

1. M.S.Word
2. M.S. Powerpoint
3. Coral draw
4. Ms Excel

14. பின்வருவனவற்றுள் கட்புல ,செவிப்புல ஊடகமாக செயற்படக்கூடியது.

1. சுவரொட்டி
2. தொலைக்காட்சி
3. சஞ்சிகை
4. வானொலி

www.lkedu.lk

15.வெளிநாட்டுத்தூதரகம் ஒன்றுக்கு உத்தியோகபூர்வ கடிதம் ஒன்று அவசரமாக அனுப்ப வேண்டிய தேவை உள்ளது. இதற்கு மிகப் பொருத்தமான வழி வகையாவது பின்வருவனவற்றுள்

1. மின்னஞ்சல் மூலம் அனுப்புதல்
2. பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்
3. கூரியர் சேவையிடம் கையளித்தல்.
4. தொலைநகல் மூலம் அனுப்புதல்

16.சாதாரண தபாலுக்கு பதிலாக மின்னஞ்சலைப் பயன்படுத்தும் தன்மை அதிகரித்து வருவதாக ஆய்வின் மூலம் அறியப்படுகின்றது. இதற்கான காரணங்களாக அமையக்கூடியது.

A-மின்னஞ்சல் சாதாரண தபாலை விட விரைவானது.

B-மின்னஞ்சல் சாதாரண தபாலை விட செலவு குறைந்தது.

C- மின்னஞ்சல் மூலம் வேறுபட்ட ஆவணங்களையும் இணைத்து அனுப்பக்கூடிய வசதி கொண்டது.

இவற்றுள் சரியானது

1. A,B மட்டும் சரியானது
2. B,C மட்டும் சரியானது
3. A,C மட்டும் சரியானது
4. மேற்கூறிய யாவும்.

17.விரிவுரையொன்றில் துரித எறிவை பயன்படுத்தப்படுவது

1. முன்னமே தயாரிக்கப்பட்டவற்றை அளிக்கை செய்வதற்காக
2. பல் ஊடுகாட்டித் தாள்களை காட்சிப்படுத்துவதற்காக
3. வர்ணப்புகைப்படங்களை காட்சிப்படுத்த
4. சிலவற்றை எழுதவும் காட்சிப்படுத்தவும்.

18.குறுகிய காலப்பகுதி ஒன்றில் குறைந்த எண்ணிக்கையிலும் உயர் தரத்திலும் அச்சுப்பதித்தலை மேற்கொள்ளமிகப் பொருத்தமான தொழில்நுட்ப முறை

1. எண்மான அச்சு
2. எழுத்து அச்சு
3. லித்தோ அச்சு
4. எதிரிட்டு அச்சு

19 .இருவருக்கிடையே நடைபெறும்.

சமூக இருப்பிற்கு அத்தியாவசியமான அங்கமாக இருத்தல்.

தொடர்பாளனுக்கும் பெறுநருக்குமிடையே அன்னியோன்ய தன்மை காணப்படும்.

பின்வரும் இயல்புகளை தன்னகத்தே கொண்ட தொடர்பாடல் **வகை**

1. தனியாள் தொடர்பாடல்
2. ஆளிடைத்தொடர்பாடல்
3. கூட்டுத்தொடர்பாடல்
4. பெருந்திரள் தொடர்பாடல்

20.குமரன் பாடசாலையொன்றினுள் சென்றபோது மாணவர்கள் மைதானத்தில் உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பதனை அவதானித்தான். இவ் அவதானிப்பு தொடர்புபடுகின்ற தொடர்பாடல் வடிவம்?

1. கட்புல செவிப்புலத் தொடர்பாடல்
2. சொல்சார் தொடர்பாடல்
3. கட்புல தொடர்பாடல்
4. முறைசாராத் தொடர்பாடல்

www.ikedu.lk

21.பத்திரிகையின் உள்ளடக்கம் , கட்டமைப்பு தொடர்பான முழுப் பொறுப்பினை வகிப்பவர்

1. பிரதம ஆசிரியர்
2. பதில் ஆசிரியர்
3. செய்தியாளர்
4. ஊடகவியலாளர்

22.ஊடகம் செயற்பாட்டின் போது அரசின் தலையீடு இல்லாமல் இருக்கும் சந்தர்ப்பமாவது

1. வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு அனுமதி பத்திரம் வழங்கல்.
2. இலங்கை பத்திரிகை சபையை அமைத்தல்
3. ஊடகங்களுக்கு அதிகாரிகளை நியமித்தல்
4. இலங்கை பத்திரிகை விசாரணை ஆணைக்குழுவை அமைத்தல்.

23–26வரையான பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டது.

A- சுவரேடுகள்	B- சித்திரம்	C- வீதிச்சமிச்சைகள்
D- சிட்டிகை ஒலி	E- அதான் ஒலி	F- மெல்லிசை
G- வானொலி	H- கையேடுகள்	I- தீ
J- மரக்குற்றிகள்	K- புத்தகம்	L- புகை
M- காண்டாமணி	N- சங்கீதம்	O- விலங்குகளின் ஓசை
P- வெவ்வேறு இசை சமிக்ஞைகள்		

23.மரபு ரீதியான கட்புல ஊடகங்களின் தொகுதி

1. BIJL
2. BCEM
3. AFJL
4. BIJN

24.மரபு ரீதியான செவிப்புல ஊடகங்களின் தொகுதி

1. DEFJ
2. DEHI
3. DEMO
4. DEOL

25.நவீன ரீதியான கட்புல ஊடகங்களின் தொகுதி

1.BIJL 2. ACHK 3.ACDK 4. CDEM

26.நவீன ரீதியான செவிப்புல ஊடகங்களின் தொகுதி

1. ACHK 2. BCHK 3.LMNO 4. FGNP

27.வானொலியை கண்டுபிடித்த அறிஞர் பின்வருவனவற்றுள்

1. மார்க்கோணி
2. கிரகம்பெல்
3. சார்ள்ஸ் பபேஜ்
4. மோர்ஸ்

28.ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகளில் உள்ளடங்காதது

1. பின்னூட்டம் உடனுக்குடன் பெறமுடியும்.
2. உயிரோட்டம் மிக்க தொடர்பாடல் வகையாகும்.
3. கருவி வழியாகவும் இடம் பெறும்.
4. தொடர்பாடல் செயன்முறையில் தடைகள் அதிகமாக காணப்படும்.

www.lkedu.lk

29.ஏனைய ஊடகங்களோடு ஒப்பிடுகையில் மிகவும் தாமதமாக தகவல் வெளிவரும் ஊடகம்

1. வானொலி
2. தொலைக்காட்சி
3. பத்திரிகை
4. இணையம்

30.பத்திரிகை, வானொலி,தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களை நுகருகின்ற பயனாளிகளின் ஒழுங்கு முறையே

1. வாசகர்,இரசிகர்,நேயர்
2. வாசகர், நேயர பார்வையாளர்
3. நேயர், வாசகர்,இரசிகர்
4. இரசிகர்,வாசகர், நேயர்

31.பாடசாலையொன்றின் தமிழ்த்தின விழாவின்போது நாடகமொன்று அரங்கேற்றப்பட்டது. இதில் இடம்பெறக்கூடியதொடர்பாடல் வடிவங்களாவன.

1. சொல்சார் , சொல்சாரா , எழுத்து மூலத்தொடர்பாடல்
2. கட்புலம் , முறைசாரா, செவிப்புல, எழுத்துமூலத்தொடர்பாடல்
3. எழுத்துமூலம் , கட்புல , செவிப்புல தொடர்பாடல்
4. வாய்மொழி , வாய்மொழியற்றி , கட்புல , செவிப்புலத் தொடர்பாடல்

32.கணனி சார் வெளியீட்டு உபகரணங்களில் மென்பொருளாக கொள்ளக்கூடியது.

1. இறுவெட்டு இயக்கி
2. சுட்டி
3. போட்டோசொப்
4. மையச்செயலகம்

33.வெகுசன ஊடகங்களை நுகருகின்ற பயனாளிகளுக்கு எடுத்துச் செல்லப்படும் ஒரு செய்தியின்மீது ஒரு நபரோஅல்லது ஒரு குழுவோ கட்டுப்பாட்டினை கொண்டிருப்பார்கள். இவர்கள்

1. தகுதி வாய்ந்த அதிகார பீடம்
2. வாயிற்காப்பாளர்கள்
3. ஒழுங்குபடுத்துனர்கள்
4. செம்மைப்படுத்துனர்கள்

34.பேஜர் காலப்போக்கில் வழக்கிலிருந்து அகன்று செல்கின்ற தொடர்பாடல் கருவியாகிவிட்டது. இதற்கு முக்கிய காரணமாக அமைவது

1. அதிகமான செலவீனம்
2. கையடக்கத்தொலைபேசியின் பாவனை
3. இணையத்தின் பரவுகை
4. பேஜரினால் பயன்படுத்துவதிலுள்ள சிக்கல்கள்

35.சிறிய அளவிலான அச்சுப்பதித்தல் வேலைகளுக்காக கணனிவழி அச்சுவெளியீடுகளைப் (DTP) பயன்படுத்துவது பற்றிய சில யோசனைகள் கீழே தரப்படுகின்றன.

A- உடனடியாக திருத்தங்களை மேற்கொள்ளலாம்

B- எதிரீட்டுப் பதிப்பு முறையிலும் பார்க்க செலவு குறைவு

C- மீள் அச்சுப்பதித்தல் இலகுவானது

மேற்குறித்த கூற்றுகளில் ***சரியானது***

1. A,B 2. B,C 3. A,C 4. மேற்கூறிய யாவும்

www.lkedu.lk

36.ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட நிமலனின் செயற்பாடுகளாவன படைப்புக்கு உகந்ததான பிரதியமைத்தல், நடிகர் நடிகைகளை தெரிவு செய்து காட்சிகளை படப்பிடிப்பு செய்யும் போது சிறந்த காட்சிகளை தெரிவு செய்து கொள்வது போன்ற செயல்களாகும். இதனூடாக நிமலன் இப்படைப்பில்

1. கலை ஆக்குனர்
2. இயக்குனர்
3. பதிப்பாளர்
4. ஒளிப்பதிவாளர்

37.கணனி அச்சியந்திரங்களில் கறுப்பு வெள்ளை பிரதிகளை மட்டும் பெற்றுக் கொள்ளக்கூடிய அச்சியந்திரம்

1. லேசர் அச்சு இயந்திரம்
2. இங்ஜெக்ட் அச்சியந்திரம்
3. நிழற்பிரதி இயந்திரம்
4. டொமட்றிக் அச்சியந்திரம்

38.முறைசார் தொடர்பாடல் மாதிரியானது பின்வருவனவற்றுள்

1. கொத்தணிச் சங்கிலி
2. புறணி பேசுதல் சங்கிலி மாதிரி
3. Y மாதிரி
4. தனிச்சங்கிலி மாதிரி

39.வெகுசனத் தொடர்பாடலின் பண்புகளில் பொருத்தமற்றது.

1. தொடர்பாளனும் பெறுநரும் எதிரெதிரே இருப்பார்கள்
2. செய்தி பொதுவானதாயிருக்கும்.
3. ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் வழியாக செயற்படும்.
4. அடிப்படையில் ஒரு வழியில் நடைபெறும்.

40.தகவல்களை வெளியிடுவதற்கு பயன்படுவதுடன் தொடர்பானது

1. செய்தி
2. தொடர்படுபவர்
3. ஊடகம்
4. பெறுநர்

www.ikedu.lk

முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம்- வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II **Communication and MediaStudies I,II**	**87 T I,II** **தரம் 10**	**மூன்று மணித்தியாலம்** **Three Hours**

அறிவுறுத்தல்:

1. **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
2. **முதலாம்** வினாவிற்கு ***20*** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் ***10*** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

பகுதி II


முதலாம் வினா உட்பட எவையேனும் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

கணனிசார் செயற்பாடுகளை நாம் எமது அன்றாட வாழ்க்கையில் மிக அதிகளவில் பயன்படுத்துகின்றோம்.

1. கணனி மூலம் நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான காரணங்கள் 4 தருக?
2. கணினி அச்சியந்திரங்களின் வகைகளில் 2 இனைக்குறிப்பிடுக.
3. தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகள் 4 தருக?
4. தொடர்பாடலில் ஏற்படக்கூடிய குறுக்கீடுகளின் பிரதான வகைகளை தருக.
5. செய்திப்பத்திரிகைகள் உரித்துரிமையடிப்படையில் இரண்டு வகைப்படும் அவை எவை?
6. வகுப்பறையில் நாம் பயன்படுத்தக்கூடிய எறிவை சார் எறிவை சாராத இவ்விரு ஊடக உபகரணங்களை தருக.
7. இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது ஆங்கில , தமிழ், சிங்கள பத்திரிகைகளைத் தருக.
8. இணையத்தளமொன்றை உபயோகிப்பதன் நன்மைகள் 2 தருக.
9. அலுவலகமொன்றில் நாம் பயன்படுத்தும் உபகரணங்கள் 4 தருக.
10. கடதாசி உற்பத்தியுடன் தொடர்புடைய நபரையும், அச்சியந்திரத்தினை கண்டுபிடித்த நபரையும் குறிப்பிடுக.

(10x2=20புள்ளிகள்)

2)



1. மேற்குறித்த வரிப்படம் லாஸ் வெல்லின் மாதிரியெனின் a,b,c யை பெயரிடுக.
2. ஆளிடைத் தொடர்பாடலில் b யிற்காகப் பயன்படுத்தக்கூடிய கருவிகள் 4 தருக.
3. வெகுசனத் தொடர்பாடலில் தொடர்பாளன் பயன்படுத்தக்கூடிய தகவல் மூலங்களைத்தருக.
4. மேற்குறிப்பிட்ட வரிப்படத்திலிருந்து தாக்கம் என்பதன் மூலம் நீர் விளங்குவது யாது?

(1 + 2 + 3 + 4) = 10 புள்ளிகள்

www.ikedu.lk

3) வெகுஜன ஊடகங்களை நன்கு அவதானிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின் ஊடக நடவடிக்கைகளை வகைப்படுத்தலாம்.

1. வெகுஜன ஊடகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. பத்திரிகை வரலாற்றில் ஆசிரியர்களாலே பதிப்பு செய்யப்பட்டு அவர்களின் உரிமைத்துவ பத்திரிகைகள் 3 தருக.
3. செய்திப்பத்திரிகையொன்றில் பிரதம ஆசிரியரின் கடமை யாது?
4. ஊடக செயற்பாடுகளின் மீது அரசாங்கத்தின் நேரடியான மறைமுகமான தலையீடுகள் காணப்படும். அவற்றினை பற்றி எடுத்துரைக்க.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

4) "மனிதன் மற்றவர்களுடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதன் காரணமாக தொடர்பாடல் வடிவங்கள் பிறந்தன.

1. தொடர்பாடல் எக்காரணியை மையப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன?
2. தொடர்பாடல் வடிவங்கள் 4 தருக.
3. தொடர்பாடல் வகைகளளை குறிப்பிட்டு விளக்குக.
4. நிறுவனமொன்றில் இடம்பெறும் முறைசார் தொடர்பாடலின் வழிமுறைகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

5)**"வகுப்பறையில் கற்றல் கற்பித்தலுக்காக பல்வேறுபட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

1. வகுப்பறை கற்பித்தலின் போது இடம்பெறும் தொடர்பாடல் வகை யாது?
2. வகுப்பறையில் பயன்படுத்தப்படும் ஊடக உபகரணங்களை இரு பெரும் பிரிவுகளில் வகைப்படுத்துக.
3. பாடசாலை ஒன்றில் காந்தப்பலகை பயன்படுத்தும் சந்தர்ப்பம் 2 தருக.
4. வகுப்பறையில் ஊடக உபகரணங்களை பயன்படுத்துவதன் அவசியம் 4 இனைக் குறிப்பிடுக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

6) **" தொடர்பாடலானது மனிதனின் அடிப்படைத் தேவையாகும்.**

1. தொடர்பாடலின் அடிப்படைப் பண்புக்கூறுகள் நான்கும் எவை?
2. நீங்கள் உங்களுக்குள் தொடர்பாடலை மேற்கொள்ள பயன்படுத்தக்கூடிய நான்கு வழிமுறைகளைத் தருக.
3. உங்கள் பாடசாலையின் மாணவர் நலன்புரி சங்கத்தின் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் குறித்த ஒரு சிறு குழுவுக்கு சிறிய விரிவுரையொன்றை நிகழ்த்த வேண்டியுள்ளது. அதற்கு எவ்வாறு கலங்கரை விளக்கு உபாய முறையை கையாளுவீரென சுருக்கமாகத் தருக.
4. மேற்குறித்த விரிவுரையின் போது உங்களால் பயன்படுத்தக்கூடிய நான்கு வகையான உடல் மொழியை சுருக்கமாக எடுத்துரைக்க.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

7) **வாயிற்காப்போன் எண்ணக்கருவானது தொடர்பாடலில் மிக முக்கிய பங்காற்றுகின்றது.**

1. வாயிற்காப்போன் எண்ணக்கரு என்பதன் மூலம் நீர் விளங்குவது யாது?
2. பத்திரிகை நிறுவனமொன்றில் வாயிற்காப்பாளர்களாக தொழிற்படுவோர்களைத் தருக.
3. தொடர்பாடல் செயற்பாட்டின் போது காணப்படும் பிரதானமான இரு குறுக்கீடுகளை தருக.
4. புலக்காட்சியை என்பனை வரையறுத்து அதனைப் பாதிக்கின்ற விடயங்களைக் குறிப்பிடுக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

www.ikeou.lk